# ஆகஸ்ட் 21
# புனித பத்தாம் பத்திநாதர்
# (1735 – 1914)




இவரது ஞானஸ்நானப் பெயர் ஜோசப் மெல்க்கியோர். இவருடைய பெற்றோர் ஏழைகள். இவர் குருப்பட்டம் பெற்ற பின் துணைப்பங்குக் குருவாகி, பங்குக் குருவாகவும், அதன் பின் ஆயராகவும், பின் பிதாப்பிதாவாகவும் இறுதியில் பாப்புவும் ஆனார். இவர் திருச்சபைக்குச் சிறந்த சேவைகள் பல செய்திருக்கிறார். தப்பறைக் கொள்கைகளை எதிர்த்தார். கோவில் பாடல்களை சீர்திருத்தினார். மக்கள உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ இறைவழிபாடானது உதவியாயிருக்க வேண்டுமென வழிகள் பல வகுத்தார். மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு பங்கிலும் கற்பிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். புத்தி விபரம் அறிந்த சிறுவர்களுக்கு திவ்விய நன்மை வழங்கலாம் என்று சட்டம் இயற்றினார். ஒவ்வொரு நாளுமே திவ்விய நன்மை வாங்கலாம் என்றார். திவ்விய நன்மை வாங்குகிறவர்கள் இயேசுவுக்குப் பிரியப்படும்படி இயேசுவோடு ஒன்றித்து அவர் போல வாழும்படி குற்றங்களை விலக்க ஒரு மருந்தாக, திவ்விய நற்கருணை உட்கொள்ள வேண்டும். நன்மை வாங்கியபின் ஒவ்வொருவரும் இயேசுவுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று நிருபம் எழுதித் தெரிவித்தார். "நான் ஏழையாகப் பிறந்தேன் ஏழையாக வாழ்ந்தேன். ஏழையாக இறக்க விரும்புகிறேன்" என தமது மரண சாசனத்தில் இவர் எழுதி வைத்திருக்கிறார்.

**சிந்தனை:** "தனது நினைவு, சொல், செயல் இவற்றில் விழிப்பாயிருந்து தன்னை கண்டிப்புடன் அடிக்கடி பரிசோதிக்கிறவன் தீமையை வெறுத்து விலக்கவும், நன்மையை அப்பியசிக்கவும் அதிக வலிமை பெறுகிறான்". (புனித பத்தாம் பத்திநாதர்)

**செபம்:** இயேசுவே, உமக்குப் பிரியப்பட உம்மைப் போல் வாழ, குற்றங்களை விலக்கும் மருந்தாக திவ்விய நன்மை உட்கொள்ளும்படி திருச்சபையின் அதிகாரிகள் மக்களைத் தூண்ட கிருபை செய்யும்.